# தங்கநிறம் கொண்ட



தங்கநிறம் கொண்ட எம்பெருமானே,

சிங்கமுகம் கொண்டு வந்ததேன் சொல் !

தங்கநிறம்........

ஏற்றமிகு உன்தன் பெருமைகளை ,

தூற்றி வந்த அரக்கன் இரண்யனை ;

சீற்றமுடன் நரனும் அரியும் கலந்த,

தோற்றமுடன் வந்து வதைத்தனையே !

தங்கநிறம்.........

மாற்றமுடியாத அந்த பாலகனின்,

கூற்றை பேணிக் காத்திட வேண்டி ;

ஊற்றமிகு தூண்தனை பிளந்து நீயும்,

கூற்றுவனாகி அவனைக் கொன்றவனே !

தங்கநிறம்.........